வண்ணாரப்பேட்டை - விம்கோநகர் மெட்ரோ ரயில் திட்டத்தில்

# 2 சுரங்கப்பாதைகளில் தண்டவாளம் அமைக்கும் பணி தொடக்கம்

● அடுத்த ஆண்டு இறுதி முதல் ரயில்கள் இயக்கப்படும்

■ சென்னை

வண்ணாரப்பேட்டை - விம்கோநகர் இடையேயான மெட்ரோ ரயில் திட்டத்தில் சுரங்கப்பாதைகளில் தண்டவாளம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கியுள்ளன. இந்தத் தடத்தில் அடுத்த ஆண்டு இறுதியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் விரிவாக்கப் பணிகள் வண்ணாரப்பேட்டை - விம்கோநகர் இடையே நடைபெற்று வருகின்றன. மொத்தம் 9 கிமீ தூரம் உள்ள இந்த வழித்தடத்தில் 8 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சர் தியாகராயா கல்லூரி, கொருக்குப்பேட்டை, தண்டையார் பேட்டை, டோல்கேட், தாங்கல், கவுரிஆஷ்ரம், திருவொற்றியூர், விம்கோநகர் பகுதியில் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இதில், வண்ணாரப்பேட்டை - கொருக்குப்பேட்டை இடையே பூமியின் கீழ் சுமார் 80 அடி ஆழத்தில் 2 சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறும்போது, "ரூ.3,700 கோடி மதிப்பில் மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டப் பணிகள் நடந்து வருகின்றன. வண்ணாரப்பேட்டை - விம்கோநகர் வரையிலான இத்திட்டத்தில் வண்ணாரப்பேட்டையில் இருந்து கொருக்குப்பேட்டை வரையில் 1.8 கிமீ தூரம் இரண்டு சுரங்கப்பாதைகள் அமைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, அதில் தண்டவாளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தடத்தில் உள்ள மற்ற இடங்களில் விரைவில் தண்டவாளம் அமைக்கும் பணிகள் தொடங்கவுள்ளோம். எனவே, அடுத்த ஆண்டு இறுதியில் இந்தத் தடத்தில் பணிகள் முடிக்கப்பட்டு, மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்" என்றனர்.